தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, தை 19, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 பிப்ரவரி 1, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

செல்வங்களுள் எல்லாம் சிறப்பானது செவியால் கேட்டறியும் செவிச் செல்வம்தான். அது அனைத்துச் செல்வங்களிலும் முதன்மையான செல்வமாகும்.

1. இரங்கற்குறிப்பு

திரு. இ. அகமது, மக்களவை உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தியாவின் மூத்த அரசியல்வாதியாகவும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் பொதுச் செயலாளராகவும், தற்போது அக்கட்சியின் தலைவராகவும் உள்ள திரு. இ. அகமது அவர்கள், இன்று (1-2-2017) அதிகாலை திடீரென மறைவுற்றது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

மறைந்த திரு. இ. அகமது அவர்கள், 1967 முதல் 1991 வரை ஐந்து முறை கேரள மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1991 முதல் இதுநாள்வரை ஏழு முறை மக்களவை உறுப்பினராகவும், வெளியுறவுத் துறை, இரயில்வே துறை, மனிதவள மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகளின் மத்திய இணை

அமைச்சராகவும் மற்றும் கேரள மாநில தொழில் துறை அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

31—

முதலைப் பண்ணை

***2877—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பழைய கொள்ளிடத்தில் முதலைப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும், மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்று, தமிழகத்தினுடைய அத்தனைப் பிரச்சினைகளையும் தீர்த்து, மக்களுடைய அன்பைப் பெற்றிருக்கின்ற நான் வணங்கும் தெய்வம், என்னை அமைச்சராக்கி அழகு பார்த்த மாண்புமிகு புரட்சித்